ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலைப் பெண்கள் கைப்பற்றி ஆண்டால் அங்கு போரும் இல்லை, சாக்காடும் இல்லை என்று சொன்னார் பாரதிதாசன். பாவேந்தர் பாரதிதாசன் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் மகளிர் கரங்களுக்கு அதிகாரம் அளிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள்.

பெண்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரும் திருப்புமுனையை மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தில் 6 இலட்சத்து 8 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் 92 இலட்சத்து 9 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து வருடத்தில் 25 ஆயிரத்து 933 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கி, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் செய்யாத மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்திலே பெண்களுக்கு அதிகாரம் மற்றும் சம உரிமை அளிப்பதாக வாய் ஜாலம் காட்டும் ஒரு சில தலைவர்கள் மத்தியில், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பெண்களின் முன்னேற்றத்திற்காக மற்றும் சம உரிமைக்காக அல்லும் பகலும் பாடுபடும் ஒரே ஒப்பற்றத் தலைவர் ஆவார்.

கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலே பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மொத்தம் உள்ள 12 மாநகராட்சிகளில், 7 மாநகராட்சிகளில் பெண்களை மேயர் பதவியில் அமர்த்தி அழகு பார்த்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றபோது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள். இன்றைக்கு அதிக நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: இடஒதுக்கீடு வழங்கி, பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். தற்போது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை மேம்படுத்தும் வகையிலும், பெண்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையிலும் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்ற ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2016 பிப்ரவரி 20] [பேரவை தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS